**செய்தி வெளியீடு எண்: 964** **நாள்: 29.12.2018**

**செய்தி வெளியீடு**

‘‘கஜா’’ புயல் நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், கடலூர், திண்டுக்கல், சிவகங்கை, கரூர், திருச்சிராப்பள்ளி உள்ளிட்ட மாவட்டங்களில் வரலாறு காணாத பாதிப்புகளை ஏற்படுத்தியது. வாழ்வாதாரங்களை இழந்த மக்களுக்கு உதவிடவும், நிவாரணம் மற்றும் சீரமைப்புப் பணிகளை மேற்கொள்ளவும், முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு நன்கொடைகள் வழங்குமாறு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி K.பழனிசாமி அவர்கள் 19.11.2018 அன்று பத்திரிகைகளின் வாயிலாக நாட்டு மக்களுக்கு வேண்டுகோள் விடுத்தார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி K. பழனிசாமி அவர்களின் வேண்டுகோளினை ஏற்று, தமிழ்நாட்டில் ‘‘கஜா’’ புயலால் ஏற்பட்ட பாதிப்புகளுக்கு நிவாரணம் மற்றும் சீரமைப்புப் பணிகளுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு ஏற்கனவே **108 கோடியே 34 லட்சத்து 99 ஆயிரத்து 624 ரூபாய்** வழங்கப்பட்டுள்ளது. அதன் தொடர்ச்சியாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் நிதியுதவி வழங்கியவர்களின் விவரங்கள்.

20.12.2018 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் நிதியுதவி வழங்கியவர்களின் விவரங்கள்.

- அசோக் லேலண்ட் (Ashok Leyland) நிறுவனத்தின் தலைவர் திரு.தீரஜ் இந்துஜா அவர்கள் 3 கோடி ரூபாய்க்கான காசோலை.
- நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் (முழு கூடுதல் பொறுப்பு) திரு.எஸ்.கே. பிரபாகர், இ.ஆ.ப., அவர்கள் தமிழ்நாடு கடல்சார் வாரியத்தின் சார்பில் 2 கோடி ரூபாய்க்கான காசோலை.
- தொழில்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.கு. ஞானதேசிகன், இ.ஆ.ப., மற்றும் தமிழ்நாடு மேக்னசைட் லிமிடெட் நிறுவனத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திருமதி ஆர். கஜலட்சுமி, இ.ஆ.ப., ஆகியோர் தமிழ்நாடு மேக்னசைட் லிமிடெட் நிறுவனத்தின் சார்பில் 1 கோடி ரூபாய்க்கான காசோலை மற்றும் தமிழ்நாடு மேக்னசைட் லிமிடெட் நிறுவனப் பணியாளர்களின் சார்பில் 3 லட்சத்து 34 ஆயிரத்து 753 ரூபாய்க்கான காசோலை.
- தொழில்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.கு. ஞானதேசிகன், இ.ஆ.ப., மற்றும் புவியியல் மற்றும் சுரங்கத்துறை ஆணையர் திரு.கே. விவேகானந்தன், இ.ஆ.ப., ஆகியோர் புவியியல் மற்றும் சுரங்கத்துறை சார்பில் 1 கோடி ரூபாய்க்கான காசோலை.

- சென்னைப் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் டாக்டர் பி. துரைசாமி அவர்கள் 18 லட்சத்து 52 ஆயிரத்து 353 ரூபாய்க்கான காசோலை.
- அகில இந்திய மூவேந்தர் முன்னணி கழகத்தின் தலைவரும், மகாசேமம் அறக்கட்டளை நிறுவனத்தின் தலைவருமான டாக்டர் என். சேதுராமன் அவர்கள் மகாசேமம் அறக்கட்டளையின் மகளிர் சுயஉதவிக்குழுக்கள் சார்பில் 10 லட்சம் ரூபாய்க்கான காசோலை.
- ராஜலஷ்மி பொறியியல் கல்லூரியின் துணைத் தலைவர் டாக்டர் ஹரி சங்கர் மேகநாதன் அவர்கள் 10 லட்சம் ரூபாய்க்கான காசோலை.

21.12.2018 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் ஒசூர் பில்டர்ஸ் மற்றும் டேவலப்பர்ஸ் சங்கத்தின் தலைவர் திரு.சந்திரைய்யா அவர்கள் 10 லட்சத்து 75 ஆயிரம் ரூபாய்க்கான காசோலையை வழங்கினார்.

24.12.2018 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் நிதியுதவி வழங்கியவர்களின் விவரங்கள்.

- HCL நிறுவனத்தின் துணைத் தலைவர் திருமதி ரோஷினி நாடார் அவர்கள் 3 கோடி ரூபாய்க்கான காசோலை.
- மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் திரு. பி. தங்கமணி அவர்கள் தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் (டாஸ்மாக்) சார்பில் 2 கோடி ரூபாய்க்கான காசோலை.
- Cognizant Technology Solutions India Pvt. Ltd., நிறுவனத்தின் செயல் இயக்குநர் திரு.ஆர். ராம்குமார் அவர்கள் 1 கோடி ரூபாய்க்கான காசோலை.
- அண்ணா தொழிற்சங்கப் பேரவையின் கன்வீனரும், சட்டமன்ற உறுப்பினருமான திரு.எஸ்.டி.கே. ஜக்கையன், அண்ணா தொழிற்சங்கப் பேரவைத் தலைவர் திரு.தாடி ம. இராசு ஆகியோர் அண்ணா தொழிற்சங்கப் பேரவை சார்பில் 41 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய்க்கான காசோலை.
- Seshasayee Paper and Boards Limited நிறுவனத்தின் துணை மேலாண்மை இயக்குநர் திரு.வி. பிச்சை மற்றும் மேலாளர் திரு.ஆர். சுந்தரராமன் ஆகியோர் 25 லட்சம் ரூபாய்க்கான காசோலை.
- ராம்ராஜ் காட்டன் நிறுவனத்தின் நிறுவனர் திரு. நாகராஜன் அவர்கள் 15 லட்சம் ரூபாய்க்கான காசோலை.
- குருநானக் கல்லூரியின் மத்திய செயலாளர் மற்றும் தாளாளர் திரு.மஞ்சித் சிங் அவர்கள் 11 லட்சம் ரூபாய்க்கான காசோலை.

**26.12.2018** அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் நிதியுதவி வழங்கியவர்களின் விவரங்கள்.

- ❖ Hyundai Motor India Limited நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமை செயல் அலுவலர் திரு.எஸ்.எஸ். கிம் அவர்கள் 1 கோடி ரூபாய்க்கான காசோலை.
- ❖ ஆச்சார்ய மஹாஸ்ரமண் சதுர்மாஸ் பிரவாஸ் விவஸ்தா சமிதியைச் சேர்ந்த நிர்வாகிகள் 10 லட்சத்து 10 ஆயிரம் ரூபாய்க்கான காசோலை.
- ❖ சாயர் குழும நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திரு.சாயர் டி. கௌதம் குமார் அவர்கள் 10 லட்சம் ரூபாய்க்கான காசோலை.

**27.12.2018** அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் Federation of Bus Operators Associations of Tamil Nadu சங்கத்தின் தலைவர் திரு.கே. தங்கராஜ் அவர்கள் 15 லட்சம் ரூபாய்க்கான காசோலையை வழங்கினார்.

**28.12.2018** அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் நிதியுதவி வழங்கியவர்களின் விவரங்கள்.

- ❖ Bharat Heavy Electricals Limited நிறுவனத்தின் செயல் இயக்குநர் திரு.ஆர். ராஜாமனோகர் அவர்கள் 1 கோடியே 14 லட்சத்து 41 ஆயிரத்து 207 ரூபாய்க்கான காசோலை.
- ❖ மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் திரு.கே.பி. அன்பழகன் அவர்கள் மதுரை காமராஜ் பல்கலைக்கழகம், பாரதிதாசன் பல்கலைக்கழகம், பாரதியார் பல்கலைக்கழகம், அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம், பெரியார் பல்கலைக்கழகம், தமிழ்நாடு திறந்தவெளி பல்கலைக்கழகம், தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம், திருவள்ளுவர் பல்கலைக்கழகம் ஆகிய 8 பல்கலைக்கழகங்களின் சார்பில் மொத்தம் 69 லட்சத்து 50 ஆயிரத்து 524 ரூபாய்க்கான காசோலைகள்.

**மேலும், பொதுமக்கள் நேரடியாகவும், ஆன்–லைன் மூலமாகவும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு வழங்கிய நன்கொடைகளை சேர்த்து, இதுவரை வழங்கப்பட்ட தொகை 127 கோடியே 22 லட்சத்து 54 ஆயிரத்து 807 ரூபாயாகும்.**

******

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**